Sl. No. :

# MVIGS/18

பதிவு எண் | | | | | | | | |

## 2018

# பொது அறிவு

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக் கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
12. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும்.
13. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
14. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

[Turn over

1. Find the number which when multiplied by 15 is increased by 196?

(A) 14 (B) 20

(C) 26 (D) 28

ஒரு எண் 15-ல் பெருக்கப்படும் பொழுது 196 அதிகமாகிறது எனில் அந்த எண்ணைக் காண்

(A) 14 (B) 20

(C) 26 (D) 28

2. Simplify : $\frac{a^3+b^3}{a^2+2ab+b^2} \times \frac{a^2-b^2}{a-b}$.

(A) $a^2-ab+b^2$ (B) $a^2+ab+b^2$

(C) $a+b$ (D) $a-b$

சுருக்குக : $\frac{a^3+b^3}{a^2+2ab+b^2} \times \frac{a^2-b^2}{a-b}$.

(A) $a^2-ab+b^2$ (B) $a^2+ab+b^2$

(C) $a+b$ (D) $a-b$

3. Which term of the series 5, 8, 11, 14, .... is 320?

(A) 104th (B) 105th

(C) 106th (D) 64th

320 என்பது 5, 8, 11, 14, ... என்ற வரிசையின் எத்தனையாவது உறுப்பு?

(A) 104 வது (B) 105 வது

(C) 106 வது (D) 64 வது

4. What percent of 60 is 72?

(A) 80% (B) 120%

(C) 84% (D) 65%

60 என்பதின் எத்தனை சதவீதம் 72 ஆக இருக்க முடியும்.

(A) 80% (B) 120%

(C) 84% (D) 65%

5. Ram can do a work in 15 days. Rahim is 50% more efficient than Ram. The number of days, Rahim will take to do the same piece of work is

(A) 7½ (B) 10

(C) 12 (D) 14

ராம் என்பவர் ஒரு வேலையை 15 நாட்களில் முடிக்கிறார். ரஹீம் என்பவர் ராம்-யை விட 50% விரைவாக முடிப்பார் எனில், ரஹீம் மட்டும் தனியாக அதே வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

(A) 7½ (B) 10

(C) 12 (D) 14

6. If A : B = 5 : 7 and B : C = 6 : 11 then A : B : C is

(A) 55 : 77 : 66 (B) 30 : 42 : 72

(C) 25 : 49 : 42 (D) 30 : 42 : 77

A : B = 5 : 7 மேலும் B : C = 6 : 11 எனில் A : B : C-ன் மதிப்பு

(A) 55 : 77 : 66 (B) 30 : 42 : 72

(C) 25 : 49 : 42 (D) 30 : 42 : 77

7. 170% of 1140 = ?

(A) 1938 (B) 1824

(C) 1968 (D) 1881

1140-ல் 170% எவ்வளவு?

(A) 1938 (B) 1824

(C) 1968 (D) 1881

8. If the sum of a number and its square is 182. What is the number?

(A) 15 (B) 26

(C) 28 (D) 13

ஒரு எண்ணுடன் அதன் வர்க்கத்தைக் கூட்டினால் 182 கிடைக்கிறது எனில் அந்த எண் யாது?

(A) 15 (B) 26

(C) 28 (D) 13

9. What is the HCF of $a^2b^4 + 2a^2b^2$ and $(ab)^7 - 4a^2b^9$?

(A) $ab$ (B) $a^2b^3$

(C) $a^3b^2$ (D) $a^2b^2$

$a^2b^4 + 2a^2b^2$, $(ab)^7 - 4a^2b^9$ ஆகிய எண்களின் மி.பொ.வ. (HCF) என்ன?

(A) $ab$ (B) $a^2b^3$

(C) $a^3b^2$ (D) $a^2b^2$

10. The H.C.F. and L.C.M. of two numbers are 84 and 21 respectively. If the ratio of the two numbers is 1 : 4. Find the larger of the two numbers.

(A) 12 (B) 48

(C) 84 (D) 108

இரு எண்களின் மீ.பொ.வ. மற்றும் மீ.பொ.ம. முறையே 84, 21. அந்த எண்கள் 1 : 4 என்ற விகிதத்தில் அமைந்துள்ளன. எனில் அவற்றில் பெரிய எண் எது?

(A) 12 (B) 48

(C) 84 (D) 108

11. Find the area of a semi circle of radius 28 cm.

(A) 144 $cm^2$ (B) 1220 $cm^2$

(C) 238 $cm^2$ (D) 1232 $cm^2$

ஆரம் 28 செ.மீ. உடைய அரை வட்டத்தின் பரப்பளவு காண்.

(A) 144 ச.செ.மீ. (B) 1220 ச.செ.மீ.

(C) 238 ச.செ.மீ. (D) 1232 ச.செ.மீ.

12. Simplify $\left(\dfrac{(561 \times 561)-(31 \times 31)}{530}\right)$

(A) 530

(B) 561

(C) $31 \times 31$

(D) 592

சுருக்குக $\left(\dfrac{(561 \times 561)-(31 \times 31)}{530}\right)$

(A) 530

(B) 561

(C) $31 \times 31$

(D) 592

13. If $a:b::3:5$ and $b:c::7:2$ then $a:b:c$ is

(A) 3 : 35 : 10

(B) 21 : 35 : 10

(C) 21 : 5 : 10

(D) 21 : 35 : 2

$a:b::3:5$ மற்றும் $b:c::7:2$ எனில் $a:b:c$

(A) 3 : 35 : 10

(B) 21 : 35 : 10

(C) 21 : 5 : 10

(D) 21 : 35 : 2

14. The potential barrier of germanium PN Junction is

(A) 1.1 eV

(B) 0.7 V

(C) 0.3 V

(D) 1.1 V

ஜெர்மானியம் PN சந்திக்கும் மின்னழுத்த அரண் மதிப்பு

(A) 1.1 eV

(B) 0.7 V

(C) 0.3 V

(D) 1.1 V

15. Which of the following Noble gas is used for Inflating Aeroplane tyres?

(A) Helium (B) Neon

(C) Argon (D) Xenon

பின்வரும் எந்த உயரிய வாயு ஆகாய விமானங்களின் டயர்களில் நிரப்புவதற்குப் பயன்படுகிறது?

(A) ஹீலியம் (B) நியான்

(C) ஆர்கான் (D) செனான்

16. Inter molecular hydrogen bonding is present in

(A) O-nitrophenol (B) Water

(C) Salicylic acid (D) Salicylaldehyde

மூலக்கூறுகளுக்குக்கிடைப்பட்ட ஹைட்ரஜன் பிணைப்பைப் பெற்றுள்ள சேர்மம்

(A) O–நைட்ரோ பீனால் (B) நீர்

(C) சாலிசிலிக் அமிலம் (D) சாலிசிலால்டிஹைடு

17. Fog is a colloidal solution of

(A) Gas in Liquid

(B) Liquid in gas

(C) Gas in solid

(D) Solid in gas

பனிப்புகை என்பது

(A) நீர்மத்தில் வாயு உள்ள கூழ்மம்

(B) வாயுவில் நீர்மம் உள்ள கூழ்மம்

(C) திண்மத்தில் வாயு உள்ள கூழ்மம்

(D) வாயுவில் திண்மம் உள்ள கூழ்மம்

18. Statement : There is passive movement of nearly 70% blood from auricle into ventricle. Remaining 30% is pumped into ventricles by artirial contraction.

Reason : Opening of the atrio-ventricular valves

(A) Statement in correct. Reason is wrong

(B) Statement and reason are correct

(C) Statement and reason are wrong

(D) Statement is correct but the reason is not explaining the statement

கூற்று : ஏட்ரியங்களிலிருந்து வென்ட்ரிக்கிள்களுக்குள் 70% இரத்தம் தானாகவே மந்த நிலையில் கீழிறங்குகிறது. எஞ்சிய 30% வென்ட்ரிக்கிள்களுக்குள் ஏட்ரிய சுருக்கத்தால் திணிக்கப்படுகிறது

காரணம் : ஏட்ரியோ வென்ட்ரிக்குலார் வால்வுகள் திறப்பதால்

(A) கூற்று சரி, காரணம் தவறு

(B) கூற்று சரி, காரணம் சரி

(C) கூற்று தவறு, காரணம் தவறு

(D) கூற்று சரி காரணம் கூற்றை விளக்க வில்லை

19. A permanent birth control method in female is

(A) Copper – T

(B) Tubectomy

(C) Cervical cap

(D) Contraceptive pills

பெண்களுக்கான ஒரு நிலையான கருத்தடை முறை

(A) காப்பர்– T

(B) டியூபெக்டமி

(C) கருத்தடைச் திரைச் சவ்வு

(D) கருத்தடை மாத்திரைகள்

20. Which vitamin is known as "Sunshine vitamin"?

(A) Vitamin A

(B) Vitamin D

(C) Vitamin E

(D) Vitamin K

"சூரிய ஒளி வைட்டமின்" என்று எந்த வைட்டமினை அழைக்கப்படுகிறது?

(A) வைட்டமின் A

(B) வைட்டமின் D

(C) வைட்டமின் E

(D) வைட்டமின் K

21. Which of the following are the gaseous planets?

(A) Mercury, Earth
(B) Venus, Mars
(C) Saturn, Neptune
(D) Pluto, Earth

பின்வருவனவற்றுள் வாயுக்கோள்கள் எவை?

(A) புதன், புவி
(B) வெள்ளி,செவ்வாய்
(C) சனி, நெப்டியூன்
(D) புளூட்டோ, புவி

22. India's research stations 'Dakshin Gangotri and Maitri' are located in

(A) Arctic circle
(B) Antartica
(C) International Space Station
(D) Himalaya

இந்தியா 'தட்சிண் கங்கோத்ரி மற்றும் மைத்ரேயி' எனும் ஆய்வுக் குடியிருப்புகளை நிறுவியுள்ள பகுதி

(A) ஆர்டிக் பகுதி
(B) அண்டார்டிகா
(C) சர்வதேச விண்வெளி நிலையம்
(D) இமயமலை

23. Which of the following is the determinants of population growth?

(A) agriculture and industrial revolutions
(B) improvements in medical care
(C) protection from the natural calamity
(D) all are correct

மக்கள் தொகை வளர்ச்சியை நிர்ணயிப்பவை எவை?

(A) வேளாண் மற்றும் தொழிற் புரட்சி
(B) மருத்துவத் துறை முன்னேற்றம்
(C) இயற்கை பேரழிவுகளில் இருந்து பாதுகாத்தல்
(D) அனைத்தும் சரி

24. The literacy rate in India in 1991 was

(A) 75.85

(B) 54.16

(C) 65.38

(D) 52.10

இந்திய எழுத்தறிவு வீதம் 1991 ல்

(A) 75.85

(B) 54.16

(C) 65.38

(D) 52.10

25. Name the economists who got the first Nobel prize for the econometrics

(A) Marshall and Samuvelson

(B) Ricardo and Knight

(C) Kicks and Dalton

(D) Jan Tinbergen and Ragnar Frisch

முதன் முதலில் அளவியல் பொருளாதாரத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்கள் யார்?

(A) மார்ஷல் மற்றும் சாமுவேல்சன்

(B) ரிக்கார்டோ மற்றும் நைட்

(C) கிக்ஸ் மற்றும் டால்டன்

(D) ஜான் டின்பெர்கன் மற்றும் ராக்னர் ஃபிரிஷ்

26. "The laws of economics are to be compared with the laws of tides rather than with the simple and exact law of gravitation" by

(A) Marshall

(B) Adam Smith

(C) Keynes

(D) Ricardo

பொருளியல் விதியை எளிய துல்லியமான புவி ஈர்ப்பு விசை விதிகளோடு ஒப்பிடுவதை விட கடல் அலைகளின் விதிகளோடு ஒப்பிடலாம் என்று கூறியவர்

(A) மார்ஷல்

(B) ஆடம் ஸ்மித்

(C) கீன்சு

(D) ரிக்கார்டோ

27. The 74th Amendment also known as the ―――――――― provides for setting up of three types of Municipal bodies.

(A) Nagarpalika Act

(B) District level Panchayat

(C) Gram Sabha Act

(D) Cantonment Board Act

―――――――― என அறியப்படும் 74வது சட்டதிருத்தம் மூன்று வகையான நகராட்சி அமையப் பெருவதற்கு வகை செய்கிறது.

(A) நகர்பாலிக் சட்டம்

(B) மாவட்டப் பஞ்சாயத்து

(C) கிராம சபை சட்டம்

(D) இராணுவ கூடவாரிய சட்டம்

28. Pick out the false statement (Only one statement is false)

(A) Administrative Reforms Commission was setup on January 5, 1966

(B) Under the chairmanship of Morarji Desai with 15 members

(C) The commission submitted its 20 reports

(D) The commission studied the major ten areas of public administration

தவறான கூற்றை தேர்வு செய்க (ஒன்று மட்டும் தவறான கூற்று)

(A) நிர்வாக சீர்திருத்த ஆணையம் ஜனவரி 5 1966ல் அமைக்கப்பட்டது

(B) மொரார்ஜி தேசாயின் தலைமையின் கீழ் 15 உறுப்பினர்கள் உள்ளனர்

(C) இந்த ஆணையம் 20 அறிக்கைகளை சமர்பித்தது.

(D) இந்த ஆணையம் பொது நிர்வாகத்தின் 10 களங்களை ஆய்ந்துள்ளது

29. The word 'Socialist and Secular' were added to the preamble by :

(A) 41st amendment

(B) 42nd amendment

(C) 46th amendment

(D) 44th amendment

'சமதர்மம்' மற்றும் 'சமயச் சார்பின்மை' என்ற வார்த்தை எந்த அரசியலமைப்பு திருத்தத்தின் படி முகப்புரையில் சேர்க்கப்பட்டது.

(A) 41 வது திருத்தம்

(B) 42 வது திருத்தம்

(C) 46 வது திருத்தம்

(D) 44 வது திருத்தம்

30. Which one of the following rights was described by Dr. B.R. Ambedkar as the heart and soul of the Constitution?

(A) Right to freedom of religion

(B) Right to property

(C) Right to equality

(D) Right to Constitutional remedies

Dr. B.R. அம்பேத்கரால் இந்திய அரசியலமைப்பின் இதயமும் உயிரும் என வர்ணிக்கப்பட்ட அடிப்படை உரிமை எது?

(A) சமய உரிமை

(B) சொத்துரிமை

(C) சமத்துவ உரிமை

(D) அரசியலமைப்பிற்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

31. What is the age qualification for a member of District Panchayat?

(A) 21 (B) 25

(C) 30 (D) 35

மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினராவதற்கு வயது தகுதி

(A) 21 (B) 25

(C) 30 (D) 35

32. The legislature of Tamilnadu had bicameralism upto the year

(A) 1986 (B) 1988

(C) 1996 (D) 1998

தமிழ்நாடு எந்த ஆண்டு வரை ஈரவை சட்டமன்றத்தை பெற்றிருந்தது

(A) 1986 (B) 1988

(C) 1996 (D) 1998

33. The hormone renin is produced by the

(A) Pancreas (B) Gall Bladder

(C) Liver (D) Kidneys

__________ ரெனின் என்னும் ஹார்மோனை உற்பத்தி செய்கிறது.

(A) கணையம் (B) பித்தப்பை

(C) கல்லீரல் (D) சிறுநீரகங்கள்

34. Ashoka the great actual coronation

(A) 273 B.C
(B) 272 B.C
(C) 271 B.C
(D) 269 B.C

மகா அசோகர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஆண்டு எது?

(A) 273 கி.மு
(B) 272 கி.மு
(C) 271 கி.மு
(D) 269 கி.மு

35. The guardian of Shivaji was

(A) Malik Amber
(B) Balaji Viswanath
(C) Afzal Khan
(D) Dadaji Kondadev

சிவாஜியின் பாதுகாவலர்

(A) மாலிக் ஆம்பர்
(B) பாலாஜி விஸ்வநாத்
(C) அப்சல்கான்
(D) தாதாஜி கொண்டதேவ்

36. Who used the Indian soldiers to fight against Alexander?

(A) Cyrus
(B) Darius I
(C) Xerxes
(D) Darius III

மகா அலெக்சாண்டர் படையெடுப்பின் போது அவருக்கெதிராக இந்திய வீரர்களை பயன்படுத்திய மன்னர் யார்?

(A) சைரஸ்
(B) முதலாம் டேரியஸ்
(C) செர்க்ஸஸ்
(D) மூன்றாம் டேரியஸ்

37. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | First Battle of Panipat | 1. | 1540 |
| (b) | Battle of Bilgram | 2. | 1526 |
| (c) | Battle of Haldighati | 3. | 1556 |
| (d) | Second Battle of Panipat | 4. | 1576 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

கீழ்கண்டவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | முதல் பானிப்பட் போர் | 1. | 1540 |
| (b) | பில்கிராம் போர் | 2. | 1526 |
| (c) | ஹால்திகாட் போர் | 3. | 1556 |
| (d) | இரண்டாம் பானிப்பட் போர் | 4. | 1576 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

38. The member of Rajya Sabha are elected indirectly. How many members who are distinguished in the field of Art, Literature, Science and Social Service are nominated by the President?

(A) 12 Members
(B) 13 Members
(C) 14 Members
(D) 15 Members

மேலவை உறுப்பினர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எத்தனைப் பேர் கலை, இலக்கியம், அறிவியல் மற்றும் சமூகப் பணியில் சிறப்பாக பணிபுரிந்தவர்களை குடியரசு தலைவரால் நியமிக்கிறார்கள்?

(A) 12 பேர்கள்
(B) 13 பேர்கள்
(C) 14 பேர்கள்
(D) 15 பேர்கள்

39. When Subhash Chandra Bose reached Berlin, he was welcomed by?

(A) Hitler

(B) Goebbles

(C) Hindenberg

(D) Ribbentrop

சுபாஷ் சந்திர போஸ் பெர்லின் நகரம் சென்ற போது அவரை வரவேற்றவர் யார்?

(A) ஹிட்லர்

(B) கோயபல்ஸ்

(C) ஹிண்டன்பர்க்

(D) ரிபன்டிராப்

40. The Maratha Chief who had correspondence with Keralavarma and Tamil rebels was

(A) Yadul Nayak

(B) Dhoondaji Waug

(C) Pazhazhi Raja

(D) Raja Wodayar

தமிழகத்தை சேர்ந்த போராளிகள் மற்றும் கேரள வர்மனனோடு தொடர்பில் இருந்த மராத்தியர் யார்?

(A) யதுல் நாயக்

(B) துண்டாஜி வாக்

(C) பழசி ராஜா

(D) ராஜா உடையார்

41. Which is called as 'Pink City'?

(A) Jodhpur (B) Jaipur

(C) Jaisalmer (D) Udaipur

'இளஞ்சிவப்பு நகரம்' என அழைக்கப்படுவது எது?

(A) ஜோத்பூர் (B) ஜெய்பூர்

(C) ஜெய்சல்மேர் (D) உதய்பூர்

42. The First Indian Prime Minister who resigned his post was

(A) Jawaharlal Nehru (B) Morarji Desai

(C) V.P. Singh (D) Chandra Shekar

முதன் முதலில் தன் பதவியை ராஜினாமா செய்த இந்திய பிரதமர்

(A) ஜவஹர்லால் நேரு (B) மொரார்ஜி தேசாய்

(C) வி.பி. சிங் (D) சந்திர சேகர்

43. Who find that the proteins Mbn B and Mbn C are causes for the functions of Methano trophic bacteria?

(A) Niels Bohr and Team

(B) Nicolaus Copernicus

(C) Emiroson Weig and Team

(D) Robert Hooke

Mbn B மற்றும் Mbn C ஆகிய புரதங்கள் தான் மெத்தனோட்ராபிக் பாக்டீரியாக்களின் செயல்பாடுகளுக்கு காரணம் என்பதை கண்டுபிடித்தவர் யார்?

(A) நீல்ஸ் போர் மற்றும் குழு

(B) நீக்கோலஸ் கோபர்னியஸ்

(C) எமிரோசன் வெய்க் மற்றும் குழு

(D) ராபர்ட் ஹூக்கி

44. Reserve Bank of India started in the year

(A) 1947 (B) 1955

(C) 1935 (D) 1972

இந்திய ரிசர்வ் வங்கி உருவான ஆண்டு

(A) 1947 (B) 1955

(C) 1935 (D) 1972

45. Which state of India is the largest Tea producer?

(A) Tamilnadu

(B) Kerala

(C) Assam

(D) Karnataka

இந்தியாவில் அதிகம் தேயிலை உற்பத்தி செய்யும் மாநிலம்

(A) தமிழ்நாடு

(B) கேரளா

(C) அஸ்ஸாம்

(D) கர்நாடகா

46. Capital (City) of Uganda

(A) Kampala

(B) Keiro

(C) Sharja

(D) Havana

உகாண்டா நாட்டின் தலைநகர்

(A) கம்பாலா

(B) கெய்ரோ

(C) ஷார்ஜா

(D) ஹவானா

47. "Pragati" Scholarship Scheme of the Government of India is meant for

(A) Higher education of girls

(B) Technical education of girls

(C) Secondary education of girls

(D) Elementary education of girls

'பிரகதி' மத்திய அரசின் உதவித் தொகை திட்டம்

(A) பெண்களின் உயர் கல்விக்காக

(B) பெண்களின் தொழிற் கல்விக்காக

(C) பெண்களின் இடைநிலைக் கல்விக்காக

(D) பெண்களின் ஆரம்ப கல்விக்காக

48. Which one of the following is not included in the National Air Quality Index?

(A) Sulphur

(B) Nitrogen di oxide

(C) Lead

(D) Methane

கீழ்கண்டவற்றுள் எது தேசிய காற்று தரக் குறியீட்டில் சேர்க்கப்படவில்லை?

(A) கந்தகம் (சல்ஃபர்)

(B) நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு

(C) காரீயம் (Lead)

(D) மீத்தேன்

49. Which Indian has been awarded the WBC Asia Boxer of The Year Award, recently?

(A) Neeraj Goyat

(B) Mohammed Ali Qamar

(C) Shiva Thapa

(D) Akhil Kumar

சமீபத்தில், ஆசிய WBC ஆண்டு குத்துச் சண்டை விருது பெற்ற இந்தியர் யார்?

(A) நீரஜ் கோயத்

(B) முகம்மது அலி ஹீமார்

(C) சிவா தபா

(D) அகில் குமார்

50. The ratio of 9 months to 1 year is

(A) 2 : 3 (B) 3 : 4

(C) 4 : 5 (D) 5 : 6

ஒரு வருடத்தில் 9 மாதங்களின் விகிதத்தை கண்டுபிடி

(A) 2 : 3 (B) 3 : 4

(C) 4 : 5 (D) 5 : 6

51. If three numbers are $2a, 5a, 7a$, What will be their LCM?

(A) 70 $a$ (B) 65 $a$

(C) 75 $a$ (D) 70 $a^3$

$2a, 5a, 7a$ என்ற மூன்று எண்களின் மீச்சிறு பொது வகு எண் எது?

(A) 70 $a$ (B) 65 $a$

(C) 75 $a$ (D) 70 $a^3$

52. A trader buys an article for Rs. 1,200 and marks it 30% above the C.P. He then sells it after allowing a discount of 20%. Find the profit percent.

(A) 5% (B) $4\frac{1}{2}$%

(C) 4% (D) 6%

ஒரு வியாபாரி ஒரு பொருளை ரூ.1,200 வாங்கினார். பின்பு அதன் அடக்கவிலைக்கு மேல் 30% குறித்த விலைக்கு 20% தள்ளுபடி கொடுக்கிறார். விற்ற விலையின் லாபம் % என்ன?

(A) 5 % (B) $4\frac{1}{2}$%

(C) 4% (D) 6%

53. 12 men can do a piece of work in 24 days. How many days are needed to complete the work, if 8 men do this work?

(A) 28
(B) 36
(C) 48
(D) 52

ஒரு வேலையை 12 மனிதர்கள் சேர்ந்து 24 நாட்களில் முடிக்கின்றனர். அதே வேலையை 8 மனிதர்கள் சேர்ந்து முடிக்க எத்தனை நாட்கள் ஆகும்?

(A) 28
(B) 36
(C) 48
(D) 52

54. A sum of money at simple interest amounts to Rs. 815 in 3 years and to 854 in 4 years. The sum is

(A) Rs. 650
(B) Rs. 690
(C) Rs. 698
(D) Rs. 700

ஒரு தொகை தனிவட்டியில் 3 வருடத்தில் ரூ. 815 ஆகிறது. அதுவே, 4 வருடத்தில் ரூ. 854 ஆகிறது என்றால் அந்த தொகை எவ்வளவு?

(A) ரூ. 650
(B) ரூ. 690
(C) ரூ. 698
(D) ரூ. 700

55. The G.C.D. of $a^3 b^4, ab^5c^2, a^2b^7c$.

(A) $ab^4$
(B) $a^2b^4$
(C) $a^4c$
(D) $a^2c^4$

$a^3 b^4, ab^5c^2, a^2b^7c$ -ன் மீ.பொ.வ - என்பது.

(A) $ab^4$
(B) $a^2b^4$
(C) $a^4c$
(D) $a^2c^4$

56. Simple interest for an amount is Rs. 120 at 6% per annum for two years. What is the amount, if the simple interest is Rs. 90 at the same rate of interest for 3 years?

(A) 1000
(B) 1500
(C) 500
(D) 750

ஒரு தொகைக்கு, 6% வட்டி வீதத்தில் 2 ஆண்டுகளுக்கு தனி வட்டி ரூ. 120 ஆகிறது. அதே வட்டி வீதத்தில் மூன்று ஆண்டுகளுக்கு தனிவட்டி ரூ. 90 எனில் தொகை எவ்வளவு

(A) 1000
(B) 1500
(C) 500
(D) 750

57. If $\frac{a}{b} = \frac{4}{5}$ and $\frac{b}{c} = \frac{15}{16}$, find the value of $\frac{c^2 - a^2}{c^2 + a^2}$

(A) $\frac{7}{25}$
(B) $\frac{7}{24}$
(C) $\frac{6}{25}$
(D) $\frac{3}{25}$

$\frac{a}{b} = \frac{4}{5}$ மற்றும் $\frac{b}{c} = \frac{15}{16}$ எனில் $\frac{c^2 - a^2}{c^2 + a^2}$ -ன் மதிப்பானது

(A) $\frac{7}{25}$
(B) $\frac{7}{24}$
(C) $\frac{6}{25}$
(D) $\frac{3}{25}$

58. The number divisible by 9 is

(A) 18736804
(B) 83360715
(C) 44679013
(D) 14681439

9 என்ற எண்ணால் வகுபடக் கூடிய எண்

(A) 18736804
(B) 83360715
(C) 44679013
(D) 14681439

59. A 4 cm. cube is cut into 1 cm. cubes. The total surface area of all the small cube is

(A) 96 $cm^2$ (B) 24 $cm^2$

(C) 384 $cm^2$ (D) 284 $cm^2$

4 செ.மீ உடைய கன சதுரமானது 1 செ.மீ உடைய சிறிய கன சதுரங்க்ளாக வெட்டப்படுகிறது எனில் சிறிய கன சதுரங்களின் மொத்த பரப்பு யாது?

(A) 96 செ.மீ$^2$ (B) 24 செ.மீ$^2$

(C) 384 செ.மீ$^2$ (D) 284 செ.மீ$^2$

60. Simplify $\frac{(171 \times 171) - (69 \times 69)}{240}$

(A) 102 (B) 240

(C) 171 (D) 69

சுருக்கு $\frac{(171 \times 171) - (69 \times 69)}{240}$

(A) 102 (B) 240

(C) 171 (D) 69

61. Find the L.C.M of 72, 108 and 2100

(A) 37,800 (B) 2,100

(C) 36,600 (D) 28,400

மீ.பொ.ம காண். 72, 108 மற்றும் 2100

(A) 37,800 (B) 2,100

(C) 36,600 (D) 28,400

62. The first Indian Communication satellite put in geo-stationary orbit is,

(A) PSLV (B) Aryabhatta

(C) APPLE (D) Rohini

பூமியின் சுற்றுவட்டப் பாதையில் தொலைத்தொடர்புக்காக இந்தியா அனுப்பிய முதல் செயற்கைக்கோள்

(A) பிஎஸ்எல்வி (B) ஆரியபட்டா

(C) ஆப்பிள் (D) ரோகிணி

63. The system of unit accepted universally was

(A) CGS (B) FPS

(C) MKS (or) SI unit (D) HKS

உலக அளவில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அலகுமுறை

(A) CGS முறை (B) FPS முறை

(C) MKS (அல்லது) SI முறை (D) HKS முறை

64. 'Bunsen burner' works, based on the principle of

(A) De Morgan theorem

(B) Bernoull's theorem

(C) Surface Tension

(D) Photo conductivity

கீழ்க்கண்ட தத்துவத்தின் அடிப்படையில் புன்சன் எரிகலன் செயல்படுகிறது

(A) டிமார்கன் தேற்றம்

(B) பெர்னௌலி தேற்றம்

(C) பரப்பு இழுவிசை

(D) வெப்பமின் கடத்தல்

65. The compound formed when aniline is heated with Fuming sulphuric acid at 353K is

(A) p- amino benzene sulphonic acid

(B) o- amino benzene sulphonic acid

(C) m- amino benzene sulphonic acid

(D) p- nitro benzene sulphonic acid

அனிலினை புகையும் கந்தக அமிலத்துடன் 353K வெப்பபடுத்தும் போது உருவாகும் சேர்மம்

(A) p- அமினோ பென்சீன் சல்ஃபோனிக் அமிலம்

(B) o- அமினோ பென்சீன் சல்ஃபோனிக் அமிலம்

(C) m- அமினோ பென்சீன் சல்ஃபோனிக் அமிலம்

(D) p- நைட்ரோ பென்சீன் சல்ஃபோனிக் அமிலம்

66. Find the incorrect statement :

I. Ozone depletion will affect crop yield

II. Ozone depletion will not cause damage to fish larvae

III. Ozone depletion will cause skin cancer in man

(A) II only

(B) I only

(C) III only

(D) I, II and III are incorrect

தவறான வாக்கியத்தை தேர்ந்தெடு

I. ஓசோன் இழப்பினால் விளைச்சல் பாதிக்கும்

II. ஓசோன் இழப்பு மீன் குஞ்சுகளில் எந்த பாதிப்பும் ஏற்படுத்தாது

III. ஓசோன் இழப்பால் மனிதனுக்கு தோல் புற்றுநோய் ஏற்படும்

(A) II மட்டும்

(B) I மட்டும்

(C) III மட்டும்

(D) I, II, III மூன்றும் தவறு

67. What is the contribution of India towards the world mica production?

(A) 40%
(B) 60%
(C) 66%
(D) 50%

உலக மைக்கா உற்பத்தியில் இந்தியாவின் பங்கு யாது?

(A) 40%
(B) 60%
(C) 66%
(D) 50%

68. Which of the following deserts does not lie in the Northern Hemisphere?

(A) Gobi
(B) Kalakari
(C) Sahara
(D) Thar

வட கோளார்த்தத்தில் காணப்படாத பாலைவனம் எது?

(A) கோபி
(B) கலகாரி
(C) சகாரா
(D) தார்

69. Name the location of Evergreen forest

(A) Temperate region
(B) Equatorial region
(C) Subtropical region
(D) Polar region

பசுமை மாறாக் காடுகளின் அமைவிடம் யாது?

(A) மிதவெப்பமண்டலப் பகுதி
(B) நிலநடுக்கோட்டுப் பகுதி
(C) துணைவெப்பமண்டலப் பகுதி
(D) துருவ மண்டலம்

70. In recent times unaccounted money has been used for financing ———— dealings.

(A) Transaction
(B) Precautionary
(C) Speculative
(D) Cheap money

அண்மை காலத்தில் நாட்டில் பழக்கத்தில் உள்ள கருப்பு பணம் அதிக அளவில் ———— வாணிபத்திற்கு பயன்படுத்தப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

(A) பரிமாற்றம்
(B) முன்னெச்சரிக்கை
(C) ஊக
(D) மலிவுப்பணம்

71. ———— is sometimes recommended as a remedy for depression.

(A) Creeping inflation
(B) Cost push inflation
(C) Price control
(D) Wage cut

———— பொருளாதார மந்தத்திற்கு தீர்வாக சில சமயங்களில் அமைகிறது.

(A) தவழும் பணவீக்கம்
(B) செலவு உந்து பணவீக்கம்
(C) விலைகட்டுப்பாடு
(D) கூலி குறைப்பு

72. Match it :

(a) Prof. Dimock — 1. Budget
(b) Prof. Fisher — 2. Public finance
(c) Prof. Seligman — 3. Equation of exchange
(d) Prof. Dalton — 4. Tax

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

பொருத்துக :

(a) பேராசிரியர் டிமாக் — 1. வரவு செலவு திட்டம்
(b) பேராசிரியர் பிஷர் — 2. பொது நிதி
(c) பேராசிரியர் செலிக்மேன் — 3. பரிமாற்றச் சமன்பாடு
(d) பேராசிரியர் டால்டன் — 4. வரி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

73. Setting up of national clean development mechanism authority as per

(A) Kyoto protocol

(B) Coastal regulation zone

(C) National chemical management

(D) National environmental policy

————————— யை பின்பற்றி தேசிய சுத்தம் சார்ந்த வளர்ச்சி கருவி அதிகார குழு ஒன்றை ஏற்படுத்துதல்

(A) கியாட்டோ முறை

(B) கடலோர கட்டுப்பாட்டுப்பகுதி

(C) தேசிய இரசாயன நிர்வாக முறை

(D) தேசிய சுற்றுச்சூழல் கொள்கை

74. Arrange the pattern of Industrial growth in India correctly

1. Intermediate goods
2. Basic goods
3. Capital goods
4. Consumer goods

(A) 3, 1, 2, 4 (B) 2, 1, 3, 4

(C) 3, 2, 4, 1 (D) 2, 3, 4, 1

இந்திய தொழில் வளர்ச்சியின் வகைகளை பண்டங்களின் அடிப்படையில் வரிசைபடுத்தி எழுதுக.

1. இடைவினைப் பண்டங்கள்
2. அடிப்படைப் பண்டங்கள்
3. மூலதனப் பண்டங்கள்
4. நுகர்வுப் பண்டங்கள்

(A) 3, 1, 2, 4 (B) 2, 1, 3, 4

(C) 3, 2, 4, 1 (D) 2, 3, 4, 1

75. The Declaration of the rights of man was published in the year

(A) 1817

(B) 1789

(C) 1897

(D) 1978

மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு

(A) 1817

(B) 1789

(C) 1897

(D) 1978

76. The council of ministers in the state is responsible to

(A) Municipal council

(B) Parliament

(C) Legislative council

(D) High court

மாநிலத்தில் அமைச்சரவை எதற்குப் பொறுப்புடையதாக உள்ளது

(A) நகரமன்றம்

(B) பாராளுமன்றம்

(C) சட்டமன்றம்

(D) உயர் நீதிமன்றம்

77. Father of Local Self Government is

(A) Lord Rippon

(B) Lord Chelmsford

(C) Lord Canning

(D) Lord Mountbatten

உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்

(A) ரிப்பன் பிரபு

(B) செம்ஸ் போர்ட் பிரபு

(C) கானிங் பிரபு

(D) மௌன்ட் பேட்டன் பிரபு

78. The Dowry Prohibition Act was enactment by the parliament in the year

(A) 1952 (B) 1961

(C) 2000 (D) 2011

வரதட்சணைத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

(A) 1952 (B) 1961

(C) 2000 (D) 2011

79. Direct Democracy exists in

(A) USA (B) India

(C) Portugal (D) Switzerland

நேரடி மக்களாட்சி நடைபெறும் நாடு எது?

(A) அமெரிக்கா (B) இந்தியா

(C) போர்ச்சுகல் (D) சுவிட்சர்லாந்து

80. In which form of Government is the executive not responsible to the legislature?

(A) Collegiate

(B) Parliamentary

(C) Presidential

(D) Dictatorship

எம்முறை அரசாங்கத்தில் தலைவர் சட்டமன்றத்திற்கு பொறுப்புடையவராக இருக்கமாட்டார்?

(A) குழு முறை

(B) பாராளுமன்ற முறை

(C) தலைவர் முறை

(D) சர்வாதிகார முறை

81. Which salt is used in Test Tube funnel experiment?

(A) Pottassium chloride
(B) Sodium bi carbonate
(C) Sodium carbonate
(D) Sodium chloride

ஆய்வுக் குழல் புனல் ஆய்வில் பயன்படுத்தப்படும் உப்பு

(A) பொட்டாசியம் குளோரைடு
(B) சோடியம் பை கார்பனேட்
(C) சோடியம் கார்பனேட்
(D) சோடியம் குளோரைடு

82. Which plant roots yield powerful Alkaloid, named 'Atropine'?

(A) Dautura Stramonium
(B) Withania Somnifera
(C) Solanum trilobatum
(D) Atropa belladona

எந்த தாவர வேர்களிலிருந்து, அட்ரோஃபின் என்ற ஆல்கலாய்டு பிரித்தெடுக்கப்படுகிறது?

(A) டாட்டுரா ஸ்ட்ராமோனியம்
(B) வைத்தானியா சாம்னிஃபெரா
(C) செலானம் ட்ரைலோபேட்டம்
(D) அட்ரோபா பெல்லடோனா

83. The most important city on the western side of the Gangetic Plain is

(A) Panipat
(B) Simla
(C) Delhi
(D) Kolkatta

கங்கைச் சமவெளியின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள முக்கியமான நகரம் எது?

(A) பானிப்பட்
(B) சிம்லா
(C) டெல்லி
(D) கொல்கத்தா

84. Krishnadeva Raya was the ruler of the Vijayanagar empire between

(A) A.D. 1485 – 1502
(B) A.D. 1509 – 1530
(C) A.D. 1533 – 1545
(D) A.D. 1550 – 1565

கிருஷ்ணதேவராயர் விஜயநகர பேரரசை ஆட்சி புரிந்த காலம்?

(A) கி.பி. 1485 – 1502
(B) கி.பி. 1509 – 1530
(C) கி.பி. 1533 – 1545
(D) கி.பி. 1550 – 1565

85. Match the following :

(a) Diwan-i-arz — 1. Firoz Tughlaq
(b) Diwan-i-Riyasat — 2. Muhammad bin Tughlaq
(c) Diwan-i-Kohi — 3. Alauddin Khilji
(d) Diwan-i-Khairat — 4. Balban

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

கீழ்கண்டவற்றை பொருத்துக :

(a) திவானி அர்ஸ் — 1. பெரோஸ் துக்ளக்
(b) திவானி ரியாசத் — 2. முகமது பின் துக்ளக்
(c) திவானி கோஹி — 3. அலாவுதீன் கில்ஜி
(d) திவானி கைரத் — 4. பால்பன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

86. During the freedom struggle on which day the Indian National Congress celebrated the Poorna Swaraj

(A) January 26, 1930

(B) January 29, 1929

(C) August 16, 1930

(D) August 18, 1930

இந்திய தேசிய காங்கிரஸ் விடுதலை போராட்ட காலத்தில் பூரண சுதந்திர நாளாக எந்த நாள் கொண்டாடப்பட்டது?

(A) ஜனவரி 26, 1930

(B) ஜனவரி 29, 1929

(C) ஆகஸ்ட் 16, 1930

(D) ஆகஸ்ட் 18, 1930

87. The Benaras Hindu University was founded due to the initiative of

(A) Nehru

(B) Gandhi

(C) Madan Mohan Malaviya

(D) Gokhale

பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் உருவாவதற்கு காரணமாக இருந்தவர்

(A) நேரு

(B) காந்தி

(C) மதன் மோகன் மாளவியா

(D) கோகலே

88. When was the new Enfield Rifle with greased cartridges introduced in the British Indian Army?

(A) November 1856 (B) December 1856

(C) January 1857 (D) February 1857

என்பீல்டு துப்பாக்கியில் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் ஆங்கிலேய இந்திய இராணுவத்தில் எந்த ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது?

(A) நவம்பர் 1856 (B) டிசம்பர் 1856

(C) ஜனவரி 1857 (D) பிப்ரவரி 1857

89. Who shifted the treasury from Murshidabad to Calcutta?

(A) Curzon (B) Rippon

(C) Bentinck (D) Warren Hastings

கருவூலத்தை முர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு மாற்றியவர் யார்?

(A) கர்சன் (B) ரிப்பன்

(C) பெண்டிங் (D) வாரன்ஹேஸ்டிங்ஸ்

90. Which is the national river of India?

(A) Brahmaputra (B) Godavari

(C) Ganges (D) Cauvery

இந்தியாவின் தேசிய ஆறு எது?

(A) பிரம்மபுத்ரா (B) கோதாவரி

(C) கங்கா (D) காவேரி

91. In which year ISRO's Polar satellite Launch Vehicle C36 (PSLV-C36) successfully launches RESOURCES AT-2A remote sensing satellite into polar sun synchronous orbit?

(A) 2015
(B) 2016
(C) 2017
(D) 2018

எந்த ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் துருவ செயற்கை கோள் வெளியீட்டு வாகனம் C36 (PSLV-C36) தொலை செறிவு செயற்கை கோளான RESOURCES AT-2Aவை சூரிய ஒளியின் சுற்றுப் பாதையில் நிறுவியது?

(A) 2015
(B) 2016
(C) 2017
(D) 2018

92. Which one of the following is not a source of Law?

(A) Caste
(B) Custom
(C) Legislature
(D) Religion

பின்வருவனவற்றில் எது சட்டத்தின் மூலாதாரம் இல்லை?

(A) ஜாதி
(B) வழக்காறு
(C) சட்டமன்றம்
(D) சமயம்

93. How many countries participated in the 23rd Winter Olympic games which was conducted by South Korea?

(A) 102
(B) 92
(C) 95
(D) 94

தென்கொரியாவில் நடைபெற்ற 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் எத்தனை நாடுகள் பங்கேற்றன?

(A) 102
(B) 92
(C) 95
(D) 94

94. Mohit Chauhan has been nominated as the Green Ambassador of this state recently

(A) Manipur (B) Sikkim

(C) Uttar Pradesh (D) Rajasthan

சமீபத்தில் மோஹித் சவான் எந்த நாட்டு பசுமை தூதராக பரிந்துரைக்கப்பட்டார்?

(A) மணிப்பூர் (B) சிக்கிம்

(C) உத்தர பிரதேசம் (D) ராஜஸ்தான்

95. This Company filed patent applications relating e-Currency technology recently

(A) Barclays (B) IBM

(C) Google (D) Facebook

சமீபத்தில் இந்த நிறுவனம் e-கரன்சி தொழில் நுட்பம் தொடர்பாக காப்புரிமை பட்டயம் பெற்றது.

(A) பார்கிலேஸ் (B) ஐ.பி.எம்

(C) கூகுள் (D) பேஸ்புக்

96. Which is the largest river by discharge volume of water in the world?

(A) Nile river (B) Amazon river

(C) Yangtze river (D) Mississippi river

உலகிலேயே அதிக நீர் எடுத்து செல்லும் நதி எது?

(A) நைல் நதி (B) அமேசான் நதி

(C) யாங்க்தீ நதி (D) மிசிசிபி நதி

97. Which country is known as the land of White elephants?

(A) Srilanka (B) Malaysia

(C) Thailand (D) Indonesia

'வெள்ளை யானை நாடு' என அழைக்கப்படும் நாடு எது?

(A) இலங்கை (B) மலேசியா

(C) தாய்லாந்து (D) இந்தோனேஷியா

98. Which river is praised in the first Century Tamil epic Silappadikaram?

(A) Cauvery (B) Godavari

(C) Saraswati (D) Ganges

முதலாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியமான சிலப்பதிகாரத்தில் எந்த நதியைப் போற்றி பாடப்பட்டுள்ளது.

(A) காவேரி (B) கோதாவரி

(C) சரஸ்வதி (D) கங்கை

99. India has a ———————— party system.

(A) Single party system

(B) Two party system

(C) Multi party system

(D) Four party system

இந்தியா ———————— கட்சி முறையை பெற்றுள்ளது.

(A) ஒற்றைக் கட்சி முறை

(B) இரு கட்சி முறை

(C) பல கட்சி முறை

(D) நான்கு கட்சி முறை

100. Which is not an International Body?

(A) SAARC (B) UNO

(C) IMF (D) IHRC

கீழ்கண்டவற்றுள் எது உலக அமைப்பு இல்லை?

(A) சார்க் (B) ஐக்கிய நாடுகள் கழகம்

(C) பன்னாட்டு நிதி நிறுவனம் (D) பன்னாட்டு மனித உரிமை கழகம்